**கவனிக்க.-** *17.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1773 - 2012 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2012.08.24**

*1773 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 832 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 837 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 837 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 839 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2008 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

டி/1284/டிஜஎஸ்சீ/(ஏவை).

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற சேவையிலிருந்து இடைநிறுத்தம்

**சேவையிலிருந்து இடை நிறுத்தம்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2008, மே மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையிலிருந்து பாதி சம்பளத்துடன் இடை நிறுத்தம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கேர்னல் (தற்காலிக பிரிகேடியர்) தொன் சந்தன பிரியந்த றூபசிங்க, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, பீஎஸ்சீ (உ/60006))

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, யூலை 29.

8-602

---

2012 இன் இல. 589

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎம்/137.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, மாச்சு மாதம் 31 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக லெப்டினன்ட் கர்னல் மதுரப்பெரும ஆரச்சிகே தீப்தி அல்விஸ் விஜயகுணரத்ன, ஆர்எஸ்பீ, கரெ (உ/61813)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப் படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கர்னல் மதுரப்பெரும ஆரச்சிகே தீப்தி அல்விஸ் விஜயகுணரத்ன, ஆர்எஸ்பீ, கரெ (உ/61813)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 07.

8-603

---

2012 இன் இல. 590

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/495.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற உள்ளக ரெஜிமேன்ட் மாற்றம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, யூலை மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இயந்திர காலாற் ரெஜிமேன்டிலிருந்து அவரது பெயரின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள ரெஜிமேன்டுக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினன்ட் கேர்ணல் ஹொரண பதிரணகே இந்திக பெரேரா - கஜபா ரெஜிமேந்து

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, ஓகத்து 15.

8-740

2012 இன் இல. 591

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎம்/99.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

#### பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் துக்கன்ன ராலலாகெதர அஜித் பிரஷன்த குமார, கவீப (உ/65018)

#### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப் படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணத்தின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் துக்கன்ன ராலலாகெதர அஜித் பிரஷன்த குமார, கவீப (உ/65018)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, மாச்சு 16.

8-738

---

2012 இன் இல. 592

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎம்/135.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

#### பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் அஷோக குமார அபேனந்த, இகாப (உ/65392)

#### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணத்தின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் அஷோக குமார அபேனந்த, இகாப (உ/65392)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 07.

8-674

---

2012 இன் இல. 593

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/157.

### இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற
இளைப்பாறுதல்

#### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) நீல் சஞ்ஜீவ சுமித்திர ஆரச்சி, இசிரெ (உ/67551)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, மே 15.

8-739

*2012 இன் இல. 594*

எம்ஓடி/டிஈஎப்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎஸ்/56.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்*

2011, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கை தரைப்படை நிரந்தரப் படையணியை சேர்ந்த பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் மதெஸ் ஆரச்சிகே நிம்மி தரங்கா சுரேஷ்னி, இஇவைப (உ/67095)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, மாச்சு 15.

8-673

---

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எவ்/சீடப்/108.

**இலங்கை தரைப்படை – நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்*

2011, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கை தரைப்படை நிரந்தரப் படையணியை சேர்ந்த பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் ரத்னாயக்க முதியன்சேலாகே நிரோஷா கீதானி ரத்னாயக்க, உபுப (உ/65162)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, மாச்சு 15.

8-741

*2012 இன் இல. 595*

எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/05.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து நிரந்தர எயார் வைஸ் மார்ஷல் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-

தற்காலிக எயார் வைஸ் மார்ஷல் பத்திரன்னஹெலாகே தொன் ஜயனாத் குமாரசிரி (01322) - தொ/பொ - 01.03.2012
தற்காலிக எயார் வைஸ் மார்ஷல் பாலசூரிய லேகம்லாகே வசந்த பாலசூரிய (01320) - தொ/பொ - 02.03.2012
தற்காலிக எயார் வைஸ் மார்ஷல் கட்டகொடகே தொண் உபாலி சந்திரதிலக (01321) - தொ/பொ - 03.03.2012

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 17.

8-638

---

*2012 இன் இல. 596*

எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/04.

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து நிரந்தர எயார் கொமதோர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் :-

தற்காலிக எயார் கொமதோர் றொஹான் பட்றிக் டெரன்ஸ் கொரயா (01403) - நிருவாகம் 01.04.2012

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 07.

8-635

*2012 இன் இல. 597*

*எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/04.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயரின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக எயார் கொமதோர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார் :-*

*தற்காலிக எயார் கொமதோர் ஜனக் பிரசன்ன வனிகதுங்க (01416) - இ/பொ - 01.03.2012*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, மாச்சு 30.*

*8-636*

---

*2012 இன் இல. 598*

*எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/03.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து நிரந்தர குரூப் கப்ரின் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-*

*தற்காலிக குரூப் கப்ரின் சந்திமால் ஹேமந்த ரண்சிரி சொய்ஸா (01693) நிருவாகம் - 10.04.2012*
*தற்காலிக குரூப் கப்ரின் ஹேரத் முதியன்சேலாகே பண்டுல ஹேரத் (01604) இ/பொ- 11.05.2012*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, ஏப்பிறல் 07.*

*8-670*

*2012 இன் இல. 599*

*எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/3ரி.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக குரூப் கப்ரின் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-*

*விங் கொமாண்டர் சந்திரகுமார ஜயசிரி வட்டகொட (01707) - நி/ரெஜி - 02.01.2012*
*விங் கொமாண்டர் கீர்த்தி வண்ணிகம (01665) - நி/ரெஜி - 10.02.2012*
*விங் கொமாண்டர் கட்டுகொலிக கமகே ரஞ்ஜித் ஹேமசந்திர (01721) - நி/ரெஜி - 13.03.2012*
*விங் கொமாண்டர் ரஞ்ஞுகொட கமகே சந்தன டீப்தி ரவிஹன்ச (01580) - நி/ரெஜி - 14.03.2012*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, ஏப்பிறல் 18.*

*8-637*

---

*2012 இன் இல. 600*

*எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/2ரீ.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக விங் கொமாண்டர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-*

*ஸ்கொட்ரன் லீடர் உதுவன் பத்திரன்னெஹலாகே யானக றொஹன் பத்திரன (01888) - நி/ரெஜி - 02.01.2012*
*ஸ்கொட்ரன் லீடர் நதீஜா ஹரிந்ரனி வராப்பிட்டிய (02230) - நி/சட்டம் - 02.01.2012*
*ஸ்கொட்ரன் லீடர் விதான குறுப்பு அப்புஹாமிலாகே சன்ஜய விதான (01964) - நி/ரெஜி - 03.01.2012*

ஸ்கொட்ரன் லீடர் ரசந்தி சித்ரிகா பத்திரன (உ/01019) - நி/ரெஜி 01.03.2012

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு,, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 07.

8-671

---

2012 இன் இல. 601

எம்ஓடி/டீஈஎப்/10/03/பீஆர்ஓ/2ரீ.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து தற்காலிக விங் கொமாண்டர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறார்கள் :-

ஸ்கொட்ரன் லீடர் உஸ்வத்த லியனகே றொமேஷ் மேரியன் அல்வன் பெரேரா (01927) - நிருவாகம் - 02.01.2012
ஸ்கொட்ரன் லீடர் நாலக யமிந்த ராஹுல நுகேகொட (01960) - நிருவாகம் - 03.01.2012
ஸ்கொட்ரன் லீடர் வத்தகே விபுல்சிரி சனத் குணதிலக (02035) - நிருவாகம் - 04.01.2012
ஸ்கொட்ரன் லீடர் நதுன் ஆசிரி கால்லகே (02029) - நிருவாகம் - 11.01.2012
ஸ்கொட்ரன் லீடர் தூவகே சிந்தக தனஞ்ஜய பண்டார அல்விஸ் (01962) - நிருவாகம் - 19.01.2012
ஸ்கொட்ரன் லீடர் சதுர சிந்தக மொறகந்த கமகே (02039) - தொ/பொ - 31.01.2012
ஸ்கொட்ரன் லீடர் அமரசிங்க ஆரச்சிலாகே சுசந்த சனத் நந்தசிரி பீரிஸ் (02028) - நிருவாகம் - 02.02.2012

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 07.

8-672

---

2012 இன் இல. 602

**தேசிய மாணவ வீரர் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

(அ) தற்காலிக பிரவே கேர்ணல் ஆக 2012, ஓகத்து மாதம் 04 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில்:

உ/3023 லெப்டினன்ட் கேர்ணல் கேபீ சந்திரலதா (பெ)
உ/3254 மேஜர் ஏடீஎம்டீ பண்டார

(ஆ) தற்காலிக பிரவே லெப்டினன்ட் கேர்ணல் ஆக 2012, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில்:

அ/3028 மேஜர் பீடீசீ ஜயவர்தன
அ/3149 மேஜர் டப்ளியூஏஎல்ஜ வீரசிங்ஹ (பெ)
அ/3158 மேஜர் எஸ்ஜி ஹேவாவிதாரண
அ/3255 மேஜர் எஸ்சீஜே ரூபசிங்ஹ (பெ)
அ/3442 மேஜர் ஆர்யூகே இராஜபக்ஷ
அ/3463 மேஜர் ஜீஎம்எஸ் பெரேரா (பெ)
அ/3627 மேஜர் எல்ஜீபீ லியங்கஸ்கும்புர

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தியும் அமைச்சு.

கொழும்பு,
2012, யூலை 31.

8-669

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2012 இன் இல. 603*

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :-

திரு. ஏ. டபிள்யூ. செனெவிரத்ன அவர்கள் 2012, சனவரி மாதம் 27 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை வர்த்தக கப்பற் சேவைப் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

8-705/1

---

*2012 இன் இல. 604*

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :-

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஜகத் பி. விஜேவீர அவர்கள் 2010, ஓகத்து மாதம் 18 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

8-705/2

*2012 இன் இல. 605*

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :-

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எம். பி. டீ. யூ. கே. மாப்பா பத்திரன அவர்கள் 2010, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

8-705/ 3

---

*2012 இன் இல. 606*

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :-

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. எம். அநுர த சில்வா அவர்கள் 2012,யூன் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணக்களத்தின் பணிப்பாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

8-705/ 4

---

# அரசாங்க அறிவித்தல்கள்

### யாத்திரிகை கட்டளைச் சட்டம்

*சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத் திருவிழா – 2012*

இவ்வாலய திருவிழாவிற்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், மேற்படி ஆலயத் திருவிழா 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31 ஆந் திகதி முடிவடையும். ஆதலால் அதில் பங்குபற்றும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் 1948 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 9886 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விதிகள் ஆலயத் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

திரு. யூ. உதய சிறிதர்,
பிரதேச செயலாளர்,

பிரதேச செயகம்,
ஏறாவூர் பற்று,
செங்கலடி.

8-607

### யாத்திரிகள் கட்டளைச் சட்டம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் பஸ்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பஸ்கொடை ரொட்டும்ப பெத் மகா புராண ரஜ மகா விகாரையின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சமய வைபவம் 2012 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 31 வெள்ளிக்கிழமை தொடக்கம் 2012, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என்பதை 175 ஆம் அதிகாரத்தின் படி யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் படி 2009.09.18 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1620 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் படி இத்தால் அறியத் தருகின்றேன்.

கே. என். கௌசல்யா குமாரி,
பிரதேச செயலாளர்,
பஸ்கொடை.

பிரதேச செயலகம்,
பஸ்கொடை,
2012, யூலை 08.

9-748

### பொல்துபே சமன் தேவாலய எஸல பெரஹெர - 2012

2012 ஆம் ஆண்டு எசல பெரஹெரவிற்கான முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் யூலை மாதம் 16 ஆந் திகதி காலை சுப வேளையில் நடைபெறும்.

- ஒகத்து மாதம் 15 ஆந் திகதி முதல் 26 ஆந் திகதி வரை உடமலுவே பெரஹெர;
- ஒகத்து மாதம் 27 ஆந் திகதி முதல் 31 ஆந் திகதி வரை மா பெரஹெர;
- செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வலஹுான் நீர்வீழ்ச்சி ஊற்றில் நீர் வெட்டுதலுடன் பெரஹெர ஊர்வலம் முடிவடைதலுடன் இவ்வைபவம் சுபமாக நிறைவுறும்.

2. ஆலயத்திற்கு வடக்கே வீதி, எம். கே. லூயிஸ் சிங்கோ, எம். கே. பொடிமஹத்மயா ஆகியோரின் காணியும், கிழக்கே சிரிமல் எம். கே. விஜேதாஸ ஆகியோரின் காணியும், தெற்கே ரண்பண்டாரவின் காணியும் கல்படியவத்த எனும் இடமும், மேற்கே பி. எம். விஜேஹாமி மற்றும் நோபட் சிந்தாமணி ஆகியோரின் காணியுமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதி பக்தர்கள் ஒன்றுகூடி வைபவத்தினை நடாத்தவென ஒழுங்கமைத்துள்ளேன்.

3. விகாரை வளாகம், போதி வளாகம் மற்றும் ஆலய வளாகமாக கருதப்படும் இடங்களில் போசனம் செய்தலை தடை செய்கிறேன்.

4. மேல் வளாகம், சைத்திய வளாகம், விகாரை வளாகம் ஆகிய அனைத்து வளாகங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கிறேன்.

5. கீழ் வீதியில் தெற்கே பிரதான படிக்கட்டுகளிலிருந்து சிங்ஹான சபை வரையும், கிழக்கே நாட்டிய சபை வரையும் கீழ் வீதியில் தேவாலய பக்கத்திற்கு ரடகெஹி வளாக மதிலிலிருந்து சைத்திய வரையும் என்னால் தெரிவு செய்யப்படடுள்ள வளாகம் வரையும் மீண்டும் ரடகெஹி வளாகத்திற்கு கிழக்கிலிருந்து மற்றும், தெற்கே கீழ் பிரிவு ரடகெஹி முன் பக்கத்தில் தேவாலயத்திற்கு கிழக்கு எல்லை வரையும் வியாபாரம் செய்வதற்காக பெரஹெர ஊர்வலம் செல்வதற்கு தடை ஏதும் இல்லாத வண்ணம் அனுமதி அளிக்கிறேன்.

6. மேற்குறிப்பிட்ட (04, 05) சரத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி தேவாலய வளாகத்திலும் வேறு ஸ்தானங்களிலும் வியாபாரம் செய்தலை முழுமையாக தடை செய்கிறேன்.

7. பிரதான வீதியில் தனியார் வாகனங்களை நிறுத்தலை தடை செய்கிறேன். மோட்டார் சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களையும் வீதியில் அல்லது ஆலய வாளகத்திற்கருகில் அதிகாரியின் அனுமதி பத்திரம் இன்றி உட்செல்தலை தடை செய்கிறேன்.

8 . என்னால் ஆலய வளாகத்தில் வியாபாரம் செய்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை குத்தகைக்கு விடுதல் பற்றி அறிக்கை மூலம் விளம்பரப்படுத்துவேன்.

9. குத்தகைக்கு எடுக்கும் வியாபார பூமியில் அமைக்கப்படும் தற்காலிக கட்டிடம் சுகாதார திணைக்களத்தின் உபதேசத்திற்கு அமையவே இடத்தினை குத்கைக்கு எடுக்கும் வியாபாரிகளின் மூலம் எசல பெரஹெர ஊர்வலத்திற்கு பிறகு தாங்கள் அமைத்த தற்காலிக கட்டிடங்களை அகற்றியபின் ஆலய வளாகத்தின் உள்ளே பொலித்தீன் மற்றும் அனைத்து கழிவுகளையும் சேர்த்து மக்கள் சுகாதார பரீட்சகரின் உபதேசத்திற்கு அமைய அகற்ற வேண்டும்.

10. என்னிடம் அனுமதி பெறாமல் ஆலய வளாகத்தில் எந்தவொரு கட்டிடம் அமைத்தலையும் தடை செய்கிறேன்.

11. பட்டாசு மற்றும் வெடிகளை இப்பிரதேசத்தில் வெடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

12. பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் அனுமதி இன்றி யாரொருவரினாலும் ஆலய வளாகத்தில் டிக்கட், கொடி விற்பனை செய்தல் அல்லது வேறு எவ்வழியிலாவது பணம் சேர்க்கக்கூடாது.

பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

8-575

---

### யாத்திரிகை விடுமுறை சட்டம்

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்மேற்கு செயலகப் பிரிவின் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் - 2012

மேற்படி ஆலய உற்சவம் 2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதி ஆரம்பமாகி 2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 02 ஆந் திகதி தேரோட்டமும், 2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 03 ஆந் திகதி தீர்த்தோற்சவத்துடனும் பூர்த்தியடையும் என்பதை யாத்திரிகர்களுக்கு மற்றும் இவ் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி 9886 ஆம் இலக்கம் கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றினையும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் இவ் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் கவனத்திற்கு எடுக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ம. தெ. மே. பட்டிப்பளை.

8-702

---

### காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறவித்தல் (அத்தியாயம் 120)

கீழ் குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 01 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 03 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 04 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கிறது.

02. 2012.08.24 ஆந் திகதி தொடக்கம் 2012.09.07 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு காலி காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

03. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் தொடர்பாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்கள் அல்லது பதிவுகள் சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பான முறைப்பாடுகளை அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பம் இட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2012.09.14 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களின் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணி பற்றிய விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரங்கள் |
|---|---|---|
| காலி மாவட்டத்தின் காலி காணிப் பதிவகத்தில் "C" எனும் பிரிவில் 376 ஆம் காண்டத்தில் 93 ஆம் இலக்க ஏடு. | தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின் வெல்லபட பத்துவேயில் ஹிக்கடுவை வவுலாகொடயில் அமைந்துள்ள "முதில்லகஹாவத்த" என்னும் இடத்தினை பிரித்து ஒதுக்கிய இலக்கம் 16 என்னும் காணித் துண்டுக்கு திரு. என். எப். டி. எஸ். ஊரகொடகே நிலஅளவீட்டாளரினால் அளவிடப்பட்ட இலக்கம் 392B மற்றும் 1949.08.15 ஆந் திகதிய அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் :-<br>வடக்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 16 ;<br>கிழக்கு : இக்காணியின் 17, 18, 19 ஆம் இலக்க காணித்துண்டுகள் ;<br>தெற்கு : இக்காணியின் 23 மற்றும் 27 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>மேற்கு : பிரதான பாதை மற்றும் இக்காணியின் 27 ஆம் இலக்க காணித்துண்டு.<br>பரிமாணம் : 0ஏக்கர் 1றூட் 13.10 பேர்ச்சுகள். | 1. ஏ. பீ. பண்டித குணவர்தன பி. நொ. ஆல் சான்றுப்படுத்துப் பட்ட 1989.05.10 ஆந் திகதிய 278 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல.: பிஎம்- 11/02/15/2012 பிටු/ஸ,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-605

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2 ஆந் திகதி மே மாதம் 2012 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், (இதனகத்துப் பின்னர் ''கம்பனி'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), பத்தரமுல்லை, தலங்கம தெற்கு, டீ. பீ. விஜேசிங்க மாவத்தை, இசுறு உயன, 549பீ ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகததைக் கொண்டுள்ளதுமான டேர்பைன் வென்டிலேஷன் சிஸ்ட்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் மாலபேயைச் சேரந்த பிரசித்த நொத்தாரிசு கே. ஞானசிறி என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2008, நவெம்பர் 26 ஆந் திகதிய 15882 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,

2011, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பது ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூபா 3,74,51,580.95) கொண்ட தொகையும் 2012, சனவரி 1 ஆந் திகதி

தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 2,50,00,000) கொண்ட தொகைமீது ஒவ்வொராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று ஒவ்வொரு மூன்று மாதமும் மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதமும் ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத (9%) விளிம்பும், அதாவது:

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக் கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதமும் (சஎபிவீ); அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதமும்.

சொல்லப்பட்ட டேர்பைன் வென்ட்டிலேஷன் சிஸ்ட்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 15882 ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக் கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்படும் காணியையும் வளவுகளையும் அதன் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐநூற்று எண்பது ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூபா 3,74,51,580.95) கொண்ட தொகையையும் 2012, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 2,50,00,000) கொண்ட தொகை மீது ஒவ்வொராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று ஒவ்வொரு மூன்று மாதமும் மீளாயப்படும் மீளாய்வுத் திகதியன்று நிலவுகின்ற பின்வரும் அடிப்படை வீதங்களுள் உயர்ந்ததாகவிருக்கும் வட்டி வீதத்தையும் ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீத (9%) விளிம்பையும் அதாவது:

(அ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு உயர்வாக நேர்த்தியாக்கப்பட்ட சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதமும் (சஎபிவீ) ; அல்லது

(ஆ) ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியின் தேறிய சராசரி 91 நாள் திறைசேரி உண்டியல் வீதம்.

அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 15882 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் டேர்பைன் வென்ட்டிலேஷன் சிஸ்ட்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 15882 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

சொல்லப்பட்ட 3210 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஹொறணை பிரதேச சபை எல்லைகளினுள் உடுவ தெற்கில் அமைந்துள்ளதும், "மிதெல்லமுல ஹேன தோட்டம்" எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர், எஸ்ஜீ ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்டதும், 2008, மாச்சு 1 ஆந் திகதிய 3087 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் இல. 1-11 காணித்துண்டம் 12 இன் பாகம், காணித்துண்டம் 13 மற்றும் 16-36 என அடையாளமிடப்பட்ட காணியின் மீள்நிலஅளவையாகவும் ஒன்று சேர்க்கையாகவுமுள்ளதும்), உரிமம் பெற்ற நிலஅளவையாளர், எஸ். ஜீ. ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008, ஒகத்து 25 ஆந் திகதிய 3210 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டீ. எச். அதுலத்முதலி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2599 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 இன் பாகமும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர், எஸ். ஜீ. ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3087 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 15 ஆம் காணித்துண்டம் பி உம்; கிழக்கில் : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3087 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் பி மற்றும் 37 ; தெற்கில் : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டீ. எச். அத்துலத்முதலி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2599 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 இன் பாகம் (யுனீக் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் வளவுகள்) மற்றும் ; மேற்கில் : தெப எல மற்றும் கௌதன்கலுவெல பரப்பளவில் இது, இரண்டு ஏக்கர் மூன்று றூட் மூன்று தசம் ஏழு ஒன்பது பேர்ச்சுகள் (2ஏ. 3றூ.1.79பே.) அல்லது 1.12243 ஹெக்டேயர்களை, அதன் மீதுள்ள பயிர்களுடன் எல்லாவற்றுடனும் கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

8-711

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி

லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"*1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், N(PVS) 28764 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும், களனி, தளுகம, பழைய கண்டி வீதி, 127/10 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், (இதனகத்துப் பின்னர் "கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), பெட்டன்ஸ் குறூப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிற்றெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சேபாலி வலத்தர என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒற்றோபர் 08 ஆந் திகதிய 1537 ஆம் இலக்க இரண்டாந்நிலை ஈட்டின் மீதும் 2010, யூலை 23 ஆந் திகதிய 1705 ஆம் இலக்க மூன்றாந்நிலை ஈட்டின்மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்,*

*2011 யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று கோடியே எழுபத்தொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 3,71,76,688.89) கொண்ட தொகையும் 2011, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை எண்பது இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்பது ரூபா ஒன்பது சதம் (ரூ. 80,95,789.09) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியும், ஒரு கோடியே எழுபத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எண்பத்தொன்பது ரூபா (ரூ. 1,71,99,989.00) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பதினேழு தசம் ஒன்று ஆறு வீத (17.16%) வட்டியும் நாற்பத்தேழு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று இருபத்தொரு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூ. 47,16,221.91) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது வீத (20%) வட்டியும் இருபத்திரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 22,38,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து வீத (25%) வட்டியும் மேற்சொல்லப்பட்ட 1537 ஆம், 1705 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது சொல்லப்பட்ட பெட்டன்ஸ் குறூப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,*

*இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1537 ஆம், 1705 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அதன் மீதுள்ள வேறு எல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று கோடியே எழுபத்தொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 3,71,76,688.89) கொண்ட தொகையை, 2011, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை எண்பது இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து எழுநூற்றியெண்பத்தொன்பது ரூபா ஒன்பது சதம் (ரூ. 80,95,789.09) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடனும், ஒரு கோடியே எழுபத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து எண்பத்தொன்பது ரூபா (ரூ. 1,71,99,989.00) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பதினேழு தசம் ஒன்று ஆறு வீத (17.16%) வட்டியுடனும் நாற்பத்தேழு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று இருபத்தொரு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூ. 47,16,221.91) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது வீத (20%) வட்டியுடனும் இருபத்திரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 22,38,000.00) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து வீத (25%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 1537 ஆம், 1705 ஆம் இலக்க ஈடுகள் மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் பெட்டன்ஸ் குறூப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தினால் ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."*

### 1537, 1705 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

